**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் தை 23–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 பிப்ரவரி 05-ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.1768/2017/அ1**

மறுவரையறை ஆணையம், தமிழ்நாடு அவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/தேபொ1 நாள் 19.10.2017, 07.12.2017, 13.12.2017 ஆகியவற்றில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் படி காங்கயம் நகராட்சி வார்டுகளுக்கு வரைவு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.752 நாள் 15.12.2017 இல் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது, வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு, பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 14 எண்ணிக்கை வரப்பெற்றது. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான கூட்டம் 01.02.2018 அன்று நடைபெற்றது. வரப்பெற்ற ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் வார்டு எண்.7ல் அய்யாவுசெட்டியார் வீதி முழுவதும் சேர்ப்பது, வார்டு எண்.9ல் உடையார் காலனி முழுமையாக சேர்ப்பது ஆகியவைகளுக்கான 4 கோரிக்கைகளும், வார்டு மறுவரையறை செய்யப்பட்டது சரியாக உள்ளதெனவும், அதில் மாற்றம் செய்யக் கூடாதென தெரிவித்த 6 கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிற 4 கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கபட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/ஈஜி/1. நாள் 31.01.2018–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள உரிய வழிகாட்டுதலின்படி தயார் செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சியின் 18 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**
தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.780 . நாள்.05.02.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.